**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் வருடம் ஜுன் மாதம் 04 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.02/2019**

மூமினாள் பேகம் வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

செல்வம் தல்மேதா (இறப்பு) வகையறா ... எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 04.06.2025 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.லிங்கராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/1ம் வாதி தரப்பில் கடந்த 11.12.2015ம் தேதி இறந்துபோன 3ம் வாதி தாஜுதீன் என்பவரின் வாரிசினை 8ம் வாதியாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி சி.பி.சி. கட்டளை 22 விதி 3ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்/1ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் 3ம் வாதி தாஜுதீன் என்பவர் கடந்த 11.12.2015ம் தேதி காலமாகி விட்டதாகவும், அவருக்கு ஒரே மனைவி மட்டும் இருந்து வருவதாகவும், குழந்தை இல்லை என்றும், இறந்துபோன 3ம் வாதியின் தாயாரான மூமுமினாள் பேகம் ஏற்கனவே இவ்வழக்கில் 1ம் வாதியாக இருந்து வருவதாகவும், மேற்படி இறந்துபோன 3ம் வாதியின் அனைத்து சொத்துக்களுக்கும் மேற்படி நபரே வாரிசாக இருந்து வருவதால் அசல் வழக்கில் 8ம் வாதியாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.02/2025 மனுவில் தாக்கல் செய்த எதிருரை இம்மனுவில் அடாப்ட் செய்யப்பட்டுள்ளது அதன் சுருக்கம்.</u>**

மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் மறுக்கப்படுகிறது என்றும், இந்த அசல் வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் தான் இருந்து வந்த நிலையில் 3ம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்க்காமல் இருந்து வந்ததாகவும், 3ம் வாதி 11.12.2015ம் தேதி இறந்தது தெரிந்தும் அன்றையதினத்திலிருந்து காலதாமதத்தை சட்டப்படி கணக்கிட வேண்டும் என்றும், மேலும் காலவரம்பு சட்டம் பிரிவு 5, அபேட்மெண்டு செட்டசைடு மனுவை தாக்கல் செய்யாமலும், வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தரப்பில் 3ம் வாதி தாஜுதீன் என்பவர் கடந்த 11.12.2015ம் தேதி காலமாகி விட்டதாகவும், மேற்படியாரின் வாரிசை அசல் வழக்கில் 8ம் வாதியாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் 3ம் வாதி இறந்த விபரம் மனுதாரருக்கு தெரிந்திருந்தும் அப்போதே வாரிசு மனு தாக்கல் செய்யாமல் வழக்கில் காலதாமதத்தை ஏற்படுத்தவும், மனுவினை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதாலும், காலவரம்பு சட்டம் பிரிவு 5, அபேட்மெண்டு, செட்டசைடு மனுவை தாக்கல் செய்யாமலும் மனு தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த நிலையில் கடந்த 11.12.2015ம் தேதி 3ம் வாதி தாஜுதீன் என்பவர் இறந்து விட்டதால் அவரது வாரிசினை அசல் வழக்கில் சேர்க்கக்கோரி கடந்த 05.10.2016ம் தேதி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் அசல் வழக்கானது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் Stay செய்யப்பட்டிருந்ததன் காரணமாக இந்த மனு திருப்பப்பட்டுள்ளது. தற்போது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் Stay vacate

செய்யப்பட்டுள்ளதன் காரணமாக மீண்டும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாமதமாக மனுதாக்கல் செய்யப்பட்ட காரணம் மனுதாரர் தரப்பில் ஏற்பட்டதல்ல என்பது தெரிய வருவதாலும், அசல் வழக்கில் 3ம் வாதியின் வாரிசை சேர்த்து அசல் வழக்கினை தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 04.06.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.04 17:43:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.06.04 17:43:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2025
**in**
O.S.No.39/2024

Date: 04.06.2025
IA order